மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 56/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | முனுசாமி | நாள் | 14.09.2023 |
| தகப்பனார் பெயர் | லட்சுமணக்கவுண்டர் | | |

**1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

18) இன்றுவரை தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி தான் சுவாதீனத்தில் உள்ள நிலையிலும், என் பெயரில் இருந்த கதவு எண்.6/20A1 க்குரிய வரிகள் ரத்து செய்யப்பட்டு விட்டதாலும், நான் 1ம் பிரதிவாதியிடமிருந்து சுவாதீனத்தை மீட்டு எனக்கு அளிக்க வேண்டும் என பரிகாரம் கோராமல் வேறு எந்த பரிகாரமும் கோர இயலாது என்றால், சரியல்ல.

19) நான் ஒப்படைத்துள்ள ஆவணங்களின் படி உள்ள சொத்தில் என் சகோதரிகள் சகுந்தலா, முத்துலட்சுமி மற்றும் முத்துலட்சுமியின் மகள் அமுதா ஆகியோர்கள் தான் வசித்து வருகிறார்கள். அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி சகுந்தலா, முத்துலட்சுமி மற்றும் அவரது மகள் அமுதா ஆகியோர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினாலும், என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

20) இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என நான் தெரிந்து கொண்டேன். கதவு எண்.8/30 மற்றும் கதவு எண்.8/31 ஆகியவற்றிலுள்ள சொத்துக்கள் 2008ம் வருடத்திலேயே 1ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டு விட்டதால் தற்போது 9 வருடங்கள் கழித்து மேற்படி பட்டாவை ஆட்சேபித்து இவ்வழக்கு தாக்கல் செய்ய காலவரையறை சட்டத்தின் கீழ் எனக்கு உரிமை பாதிக்கப்படுகிறது என்றால், சரியல்ல.

21) தற்போது இவ்வழக்கிலுள்ள தாவா சொத்து சம்பந்தமாக என் சகோதரர் கோவிந்தராஜ் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.249/2012 என்ற வழக்கை 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. அதே சொத்திற்கு மேற்படி என் சகோதரர் கோவிந்தராஜ் இறந்ததற்கு பின்னிட்டு நானும், எனக்கு பாத்தியப்பட்டது என கூறி வழக்கு தாக்கல்

செய்துள்ளதால், என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

22) நான் எந்த காலகட்டத்திலும் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லாத நிலையில், தாவா சொத்தின் சுவாதீனத்தில் உள்ளதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறானது என்றால், சரியல்ல. என் வழக்குரை மற்றும் பிரமாண பத்திரத்திலேயே நான் 2009ம் வருடத்தில் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில், அதுகுறித்து 3 ஆண்டுகளுக்குள் ஆட்சேபனை செய்யாமல் தற்போது காலம் கடந்து இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளது செல்லாதது என்றால், சரியல்ல.

23) இவ்வழக்கில் நான் வா.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனுவுடன் ஒப்புகை ரசீது எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.9 ஆவணம் இவ்வழக்கிற்காக பின்னிட்டு தயாரித்ததால் தான் அதற்கான ஒப்புகை ரசீது எதையும் அதனுள் இணைத்து தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

24) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 சொத்து வரி செலுத்து கை புத்தகத்தில் எவ்வித வரி பதிவுகளும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 புத்தகம் எந்த வருடத்திற்குரியது என்பதும் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். என் சகோதரர் கோவிந்தராஜ் நகராட்சியில் பணியில் இருந்ததை பயன்படுத்தி மேற்படி ஆவணத்தை நானே தயாரித்துள்ளேன் என்றால், சரியல்ல.

25) என் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால், தேதி, வருடம் சரியாக நினைவில்லை. ஆனால் அவர் இறந்து சுமார் 30 வருடங்கள் இருக்கும். என் தந்தை இருந்திருந்தால், அவரது பெயரில் தான் வரி ரசீது வழங்கியிருப்பார்கள் என்றால், என் தந்தை இருந்த சொத்து வேறு. தற்போது நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து வேறு. அவ்வாறு உள்ள நிலையில், இவ்வழக்கில் என் தந்தையின் பெயரிலுள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளது இவ்வழக்கிற்கு தொடர்பற்றது என்றால், சரியல்ல.

26) 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனக்கு சொந்தமானது என விளம்புகை

கோர எனக்கு உரிமை இல்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தில் நானே சுவாதீனத்தில் இல்லாத நிலையில் தாவா சொத்திலுள்ள என் சுவாதீனத்தை 1ம் பிரதிவாதி இடையூறு செய்ததாக நான் சொல்வது ஏற்கதக்கதல்ல என்றாலும், உண்மையான உரிமையாளரான 1ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல.

27) 2009ம் வருடத்திலேயே 1ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மேற்படி பட்டாவை ரத்து செய்ய வேண்டி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டா HSD பட்டா என்பதால் மேற்படி பட்டா வருவாய் துறையால் நேரடியாக 1ம் பிரதிவாதியின் அனுபவத்தின் அடிப்படையில் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி பட்டா என் பெயரிலிருந்தோ, என் தந்தை பெயரிலிருந்தோ மாறுதலாகி செல்லாத நிலையில், மேற்படி பட்டாவை ரத்து செய்ய கோருவதில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால், சரியல்ல.

28) 1ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள வரி ரசீதுகளை ரத்து செய்ய கோருவதற்கும், சுவாதீனத்திலேயே இல்லாத என் பெயரில் வரி விதிக்க கேட்பதற்கும் எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால், சரியல்ல.

29) எனக்கு உரிமையே இல்லாத 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை அவரிடமிருந்து அபகரிக்கும் கெட்ட எண்ணத்தில் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

(2, 4ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.